செய்தி வெளியீடு எண் : 997 நாள்: 20.06.2022

**<u>மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க சிறுவாணி அணையை நீர் ஆதாரமாகக் கொண்ட கோயம்புத்தூர் குடிநீர் அபிவிருத்திக் திட்டத்திற்கு தேவையான நீரை சிறுவாணி அணையில் இருந்து விடுவித்த மாண்புமிகு கேரளா முதலமைச்சர் அவர்களுக்கு மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு அவர்கள் நன்றி</u>**

சிறுவாணி அணையை நீராதாரமாகக் கொண்ட கோயம்புத்தூர் குடிநீர் அபிவிருத்தித் திட்டம் ரூ.16.16 கோடி மதிப்பீட்டில் அரசாணை எண். 2343/ நாள் 28.11.1976ல் 12.74 லட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டது.

தமிழ்நாடு மற்றும் கேரளா ஆகிய இரு மாநிலங்களுக்கிடையே ஆன ஒப்பந்தத்தின் அடிப்படையில் 650 மில்லியன் கன அடி கொள்ளவுள்ள அணை மற்றும் நீர் புகுகிணறு ஆகியவை கேரள எல்லையில் தமிழக அரசின் நிதியில் அமைக்கப்பட்டது. இந்த ஒப்பந்தத்தின் படி சிறுவாணி அணையிலிருந்து வருடத்திற்கு 1300 மில்லியன் கன அடி (நாளொன்றுக்கு 101.40 மில்லியன் லிட்டர்) வழங்கப்பட வேண்டும்.

கடந்த மூன்று ஆண்டுகளாக கேரள நீர்ப்பாசனத் துறையானது இரு மாநிலங்களுக்கு இடையேயான ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அதிகபட்ச நீர்மட்டத்தை 878.50 மீட்டருக்கு பதிலாக 877.00 மீட்டராகக் குறைத்து பராமரித்து வருகிறது. நீர்மட்டம் 1.50 மீட்டர் குறைந்ததால் 122.05 மில்லியன் கன அடி நீர் சேமிப்பு பற்றாக்குறை ஏற்பட்டது.

கேரள நீர்ப்பாசனத் துறையால் நீர் எடுப்பு கோபுரத்தில் உள்ள வால்வு கட்டுப்படுத்தப்பட்டு வந்ததால், கோவை மாநகர் மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளுக்கு நாள்தோறும் வழங்கப்படவேண்டிய 101.4 மில்லியன் லிட்டர் நீர் அளவு குறைந்து, 40 மில்லியன் லிட்டர் நீரை மட்டுமே வழங்கப்பட முடிந்தது.

இந்த பிரச்சனை குறித்து மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் மாண்புமிகு கேரளா முதலமைச்சர் அவர்களுக்கு 01.02.2022 அன்று கடிதம் எழுதினார்கள்.

கோயம்புத்தூர் மாநகராட்சி மக்களின் குடிநீர் பற்றாக்குறையினை போக்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 19.06.2022 அன்று மீண்டும் மாண்புமிகு கேரளா முதலமைச்சர் அவர்களுக்கு கடிதம் எழுதினார்.

தற்போது மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் வேண்டுகோளுக்கிணங்க, கேரளா அரசு சிறுவாணி அணையில் இருந்து

போதிய நீரை திறந்து விட்டுள்ளது. இதனால் கோயம்புத்தூர் மாநகராட்சியின் குடிநீர் பிரச்சினை தீர்க்கப்பட்டு, போதிய அளவு நீர் வழங்க இயலும்.

கோபம்புத்தூர் மாநகராட்சி மக்களின் குடிநீர் பிரச்சினையை தீர்த்து வைத்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், இரு மாநிலங்களுக்கிடையே ஆன ஒப்பந்தத்தின் படி வேண்டிய நீர் வழங்கிய மாண்புமிகு கேரளா முதலமைச்சர் அவர்களுக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

**********

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in